# தமிழ்நாடு அரசு
# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
## வட்டாட்சியர் அலுவலகம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்

அறிவிக்கை எண். 4598 /2025/அ1 நாள் : 23.07.2025

திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகு, வேடசந்தூர் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் காலிப்பணியிடங்கள் கீழ்க்காணும் விபரப்படி சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணையின்படி நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்களின் வயது, உயர்கல்வித்தகுதி, படிக்கும் திறன் மற்றும் எழுதும் திறனறிவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவை மூலமாக நிரப்பப்பட உள்ளன. கீழே தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 24.07.2025 (வியாழக்கிழமை) |
| 2 | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 22.08.2025 மாலை 5.45 மணி வரை |
| 3 | எழுதுதல் திறனறித்தேர்வு நடைபெறும் நாள் | 22.09.2025 (மாறுதலுக்குட்பட்டது) |
| 4 | நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் | 08.10.2025 (புதன் கிழமை) |

| பணி விபரம் | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் ஊதிய அட்டவணை IV நிலை 06 (ரூ.11,100 – ரூ.35,100) |
| வட்டத்தின் பெயர் | வேடசந்தூர் |

| காலிப்பணியிட விபரம்: | |
|---|---|
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை– 03 (மூன்று) | காலிப்பணியிட கிராமங்களின் விபரம் |
| | 1. குட்டம் |
| | 2. சிங்காரக்கோட்டை |
| | 3. கொல்லப்பட்டி |

**இனசுழற்சி விபரம்:-**

| வ. எண் | காலிப் பணியிட கிராமம் | இன சுழற்சி எண் | வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமை –அற்றவர் | ஆண்/ பெண்/ பொது | விதவை/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி / தமிழ்வழிக்கல்வி |
|---|---|---|---|---|---|---|
| 1 | குட்டம் | 30 | BC (other than BC Muslim) | முன்னுரிமை யற்றவர் | பெண் | ---- |
| 2 | சிங்காரக் கோட்டை | 37 | MBC/DNC | முன்னுரிமை யற்றவர் | பொது | மாற்றுத்திறனாளி Differntly abled Persons (Locometer disability including cereberal Palsy, Leprosy Cured, Dwarfism, Acid Attack Victims and Muscular Dystryophy) |
| 3 | கொல்லப் பட்டி | 38 | BC (other than BC Muslim) | முன்னுரிமை யற்றவர் | பொது | முன்னாள் இராணுவத்தினர் (Exservicemen) |

**கல்வித்தகுதி:-**

குறைந்தபட்சம் தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலை பள்ளி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC-secondary school Leaving certificate Examination) தமிழை ஒரு பாடமாக் கொண்டு தேர்வு எழுதி தேர்ச்சி/ தோல்வி அடைந்திருக்க வேண்டும். (SSLC-secondary school Leaving certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

**இதர தகுதிகள்: (அரசாணை எண்.521, நாள்.17.06.1998-ன் படி)**

★ விண்ணப்பதாரர் வேடசந்தூர் வட்டத்தைச் சார்ந்தவராகவும், அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவராகவும் இருக்க வேண்டும்.
★ தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
★ காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ சைக்கிள் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.
★ வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து மேற்படி பதிவானது நாளது தேதி வரை புதுப்பித்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு**

★ குறைந்தபட்சம் வயது (01.07.2025 அன்று) 21 வயது நிறைவு செய்திருக்க வேண்டும் (அனைத்து பிரிவினர்) / அதிகபட்சம் 32 வயது
★ அதிகபட்சம் –37 வயது பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர்/ பட்டியலினத்தவர்/ பழங்குடியினர் முன்னாள் இராணுவத்தினருக்கு 50 வயது வரை (பொதுப்பிரிவினர்)
★ முன்னாள் இராணுவத்தினரில் பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர்/ பட்டியலினத்தவர்/பழங்குடியினர் வகுப்பை சேர்ந்தோருக்கு – 55 வயது
★ மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயதுவரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும்முறை:-**

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணபத்தினை திண்டுக்கல் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான **https://dindigul.nic.in/** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து உரிய ஆவணங்களின் இணைப்புகளுடன் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

**அலுவலக முகவரி:** வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வேடசந்தூர்–624710, திண்டுக்கல் மாவட்டம்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

★ இருப்பிடச்சான்று ஒளிநகல், சாதிச்சான்று ஒளி நகல், வேலைவாய்ப்பு பதிவு அட்டை ஒளிநகல்
★ ஆதார் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஒளிநகல்கள்
★ பள்ளி மாற்றுச்சான்றிதழ் மற்றும் கல்வித்தகுதி சான்று ஒளிநகல்கள்
★ பிறப்பு சான்று, ஆதரவற்ற விதவையாக இருப்பின் அதற்கான சான்று
★ மாற்றுத்திறனாளியாக இருப்பின் அதற்குரிய அடையாள அட்டை நகல்
★ முன்னாள் இராணுவத்தினராக இருப்பின் அடையாள அட்டை நகல்
★ இருசக்கர, நான்குசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் நகல் (01.07.2025–க்கு முந்தையது)

**வட்டாட்சியர்**
**வேடசந்தூர்**

வெ.ஆ.எண்.257/செமதொஅ/திண்டுக்கல்/2025 நாள் : 23.07.2025